මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: NP/RD/DCB 2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2025.01.29

நிதி அமைச்சின் சுற்றறிக்கை: 01/2025

அனைத்து மாவட்டச் செயலாளர்களிற்கும்,

**பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத்திட்டம் - 2025**

“வளமான நாடு - அழகான வாழ்க்கை” என்ற கொள்கை அறிக்கையினூடாக நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் உற்பத்திப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது ஒரு முக்கியமான மற்றும் முன்னுரிமைப் பணியாக இனங்காணப்பட்டுள்ளது. இவ் உற்பத்திப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு, வறுமையில் வாடும் மக்களை உற்பத்திப் பணிகளில் பங்களிக்கச் செய்து அந்த மக்களின் வருமான மட்டத்தை உயர்த்துவதே அரசாங்கத்தின் பிரதான நம்பிக்கையாகும்.

மேலும், அரசாங்கத்தின் பிரதான அபிவிருத்தி இலக்காகக் காணப்படும் கிராமப்புற வறுமை ஒழிப்பு, ”பரிசுத்தமான இலங்கை” (Clean Sri Lanka) வேலைத்திட்டம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டு அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையில் இனங்காணப்பட்டுள்ள அபிவிருத்தித் தேவைகளை யதார்த்தமாக்குவதற்கும், உற்பத்திப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் 2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

2025 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு தொடர்புடைய வரவு செலவுத் தலைப்பின் கீழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிரல் அமைச்சு, மாகாண சபை ஏனைய நிறுவனங்கள் மற்றும் மூலங்களினூடாக நிதி ஒதுக்கீடுகளற்ற கிராமிய அபிவிருத்தி, வறுமைக் குறைப்பு மற்றும் மக்களின் வருமான மட்டத்தை உயர்த்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் பௌதீக உட்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் விருத்தி செய்தல் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டிற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளை முறையாக முதலீடு செய்யப்படுவதை உறுதி செய்வது உங்களது பொறுப்பாகும்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத் திட்டத்தின் கீழ் கருத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துவதை மேலும் இலகுவாக்குவதற்காக பின்வரும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. **அபிவிருத்திப் பிரிவு**

1.1 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு அபிவிருத்தி தேவைகளைக் கண்டறிவதில், பின்வரும் பிரிவுகளிற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும் (இணைப்பு 1).

| | |
|---|---|
| i. உணவுப் பாதுகாப்பு | iv. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் |
| ii. வாழ்வாதாரத்தை விருத்தி செய்தல் | v. தொழில் முனைவோர் அபிவிருத்தி |
| iii. மதிப்பு சங்கிலி அபிவிருத்தி | vi. புதிய தொழில்நுட்ப அறிமுகம் |

1.2 மேற்கூறிய பகுதிகளின் கீழ் கருத்திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்துவதில், பொது மற்றும் கூட்டு நலன்களுக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கப்படுவதுடன் தனிப்பட்ட செயற்பாடுகளிலிருந்து விலக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

2. **கருத்திட்டங்களை இனங்காணல்**

2.1. **2025 மாசி மாதம் 07 ஆம் திகதிக்கு முன்பதாக,** மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவை கூட்டி, இத் தேசிய வேலைத்திட்டம் தொடர்பாக அறியப்படுத்தல் வேண்டும்.

2.2. பன்முகப்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் கீழ் உங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு இணைப்பு 2 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

2.3. ஒரு கருத்திட்டத்தின் குறைந்தபட்ச மதிப்பு 01 மில்லியன் ரூபாய் (10 லட்சம் ரூபாய்) ஆகும்.

2.4. மேலே உள்ள இல1, அபிவிருத்திப் பிரிவின் கீழ் காணப்படும் உங்கள் மாவட்டத்தில் உள்ள இயற்கை வளங்கள், மூலப்பொருட்கள், பொருளாதார நடவடிக்கைளிற்காக பயன்படுத்த முடியுமான நிலம், சுற்றாடல் நிலைமைகள், மக்களின் பொருளாதார நடவடிக்கைகள், அப்பகுதிக்கு தனித்துவமான அபிவிருத்தி தேவைகள் போன்றவற்றுடன், வறுமையில் வாடும் மக்களைக் கருத்திற்கொண்டு, மக்களுக்குப் பயனளிக்கும் அபிவிருத்தித் தேவைகள், மாவட்ட அல்லது பிரதேச செயலக மட்டத்தில் விரைவில் இனங்காணப்படல் வேண்டும்.

2.5. கருத்திட்டங்களை இனங்காணும் போது, அம் முதலீட்டினூடாக குறிப்பிட்ட அளவு உருவாக்கப்படுகின்ற வேலைவாய்ப்பின் அளவு, பிரதேச வளங்களின் பயன்பாடு, மதிப்பு கூட்டல், சந்தைகள், விநியோக வலையமைப்பு, மதிப்பு சங்கிலி அபிவிருத்தி மற்றும் வருமான விநியோகம் போன்ற காரணிகளில் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2.6. கடந்த வருடங்களைப் போலவே, இவ்வருடமும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத் திட்டத்திற்கான கருத்திட்டங்களை இனங்காணல் மற்றும் தயார்படுத்தல் போன்ற நடவடிக்கைகளிற்காக, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரின் கீழ் முறையான வேலைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். இதற்காக மாவட்ட திட்டமிடல் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள பிரதி / உதவி பணிப்பாளர்கள் (திட்டமிடல்) நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2.7. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், பிரதேச செயலக மட்டத்தில் அபிவிருத்தி கருத்திட்டங்களை தயாரித்து பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரையுடன் மாவட்ட செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

2.8. பிரதேச செயலக மட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகளில், மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தக்கூடிய அதிக முன்னுரிமைக் கருத்திட்டங்கள் 2025 பெப்ரவரி 25 க்கு முன்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் தீர்மானிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

2.9. நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளிற்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்வதற்கு முன்பதாக, அந்நிர்மானத்தின் முன்மொழியப்பட்ட நோக்கத்திற்காக எதிர்காலத்தில் எவ்வித பாதிப்புமின்றி பயன்படுத்த முடியும் என்பது தொடர்பாக மற்றும் பராமரிப்பு

நடவடிக்கைகளிற்காக குறித்த விதிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளது தொடர்பாக மாவட்டச் செயலாளர் / பிரதேசச் செயலாளர், திருப்தி அடைதல் வேண்டும்.

2.10. இவ் வேலைத்திட்டத்துடன், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, உற்பத்திப் பொருளாதாரம் மற்றும் மதிப்புச் சங்கிலி விருத்தி தொடர்பாக வரவு செலவு திட்டத்தின் மூலம் நிரல் அமைச்சுக்களினூடாக மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களில் எவ்வித பிரதிகளாகவும் / நகலாகவும் காணப்பட முடியாது.

## 3. கருத்திட்டங்களுக்கு ஒப்புதல், நிதி விடுவிப்பு மற்றும் செயற்படுத்தல்

3.1 உங்களது மாவட்டத்திற்குரிய முன்னுரிமை அளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் / அபிவிருத்தி முன்மொழிவுகள் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதலுடன் 2025 பெப்ரவரி 28 க்கு முன்னர் இணைப்பு 03 படிவத்தின் மூலம் இறுதி அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

3.2 அம் முன்மொழிவுகளை ஆராய்ந்து கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான இறுதி அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு விடுவிப்பு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

3.3 2025 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் 2025 நவம்பர் 15 க்கு முன்பதாக பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

3.4 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் தவிர்க்க முடியாத காரணங்களுக்காகத் தவிர 2025 ஏப்ரல் 30 க்குப் பிறகு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது.

3.5 அனைத்து கருத்திட்டங்களும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள், சுற்றறிக்கைகள், பெறுகை வழிகாட்டுதல்கள் மற்றும் நிதி விதிமுறைகளின்படி செயற்படுவதை உறுதி செய்ய கடுமையான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

3.6 அபிவிருத்திக் கருத்திட்டங்கள், அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் கீழ் சமூகம் சார்ந்த நிறுவனங்களுக்கு நேரடியான ஒப்பந்தங்களை வழங்குவதில், குறித்த சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் இப் பணிகளை மேற்கொள்வதற்கான திறன் கொண்டவை என்பதை உறுதிசெய்து, அந் நிறுவனங்களிளாலேயே அதற்கான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதையும் உறுதி செய்தல் அவசியமாகும்.

## 4. வேலைத்திட்ட மேற்பார்வை

4.1 2025 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத்திட்டம் பிரதேச மற்றும் மாவட்ட அளவிலான முன்னேற்றத்தின் வாராந்த மதிப்பாய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்கு, மாவட்ட திட்ட பணிப்பாளரின் கீழ் முறையான விதிமுறைகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

4.2 இந்த முழு வேலைத்திட்டம் ஜனாதிபதி செயலகத்தால் கண்காணிக்கப்படுவதுடன் திறைசேரியின் கருத்திட்ட முகாமைத்துவ, மேற்பார்வைத் திணைக்களத்தினால் முன்னேற்றம் மற்றும் தேவையான தகவல்களை உங்களிடமிருந்து பெற்று ஜனாதிபதி செயலகத்திற்கு அவ்வப்போது சமர்ப்பிக்கப்படும். இது தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் கருத்திட்ட முகாமைத்துவ, மேற்பார்வைத் திணைக்களத்தினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும்.

4.3 இவ் வேலைத்திட்டம் உட்பட கிராமப்புற மற்றும் பிரதேச மட்டத்தில் செயற்படுத்தப்படும் கருத்திட்ட மேற்பார்வைக்காக டிஜிட்டல் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## 5. ஏனைய விடயங்கள்

5.1 நிர்மாண கருத் திட்டங்களுக்காக ஒவ்வொரு கருத்திட்ட மதிப்பிலும் 3% க்கு மிகையாகாத நிதி ஒதுக்கீடும், நிர்மானமற்ற கருத்திட்டங்களுக்கு 1% க்கு மிகையாகாத நிதி ஒதுக்கீடும் நிர்வாகச் செலவுகளாக ஒதுக்கப்பட்டு, அவை பின்வருமாறு பயன்படுத்தப்படும்.

(அ) மாவட்டச் செயலகங்கள் தொடர்பான பணிகளுக்கு உயர்ந்தபட்ச 25% க்கு உட்பட்ட

(ஆ) கருத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேச செயலக அலுவலகங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தும் நிறுவனம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு உயர்ந்தபட்ச 75% க்கு உட்பட்ட.

5.2 இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண சபைகள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாவட்டத்தில் அமைந்துள்ள அனைத்து அரச மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிநுட்ப உதவி உத்தியோகத்தர்களின் சேவைகளை உயர்ந்த பட்சமாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

5.3 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத்திட்டம் 2025 தொடர்பான காலவரையறைக்கு உட்பட்ட செயற்பாட்டுத் திட்டம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு 04).

5.4 இவ் வேலைத்திட்டத்தின் கீழ் 2025 ஆம் வருடத்தினுள் செயற்படுத்தி பூரணப்படுத்த முடியுமான கருத்திட்டங்கள் மாத்திரமே இனங்காணப்பட வேண்டும். 2025 இற்குப் பிறகும் கருத்திட்டங்களை தொடர்வது எவ்விதத்திலும் மேற்கொள்ள முடியாது

5.5 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத்திட்டம் 2025 இனூடாக செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்குச் செலுத்தப்படும் அனைத்து வகையான வரிகள் மற்றும் பிற கொடுப்பனவுகள் இவ் வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகளால் ஈடுசெய்யப்பட வேண்டியதுடன் மேலும் அதற்கான மேலதிக நிதி ஒதுக்கீடுகள் எதுவும் கிடைக்கப்பெற மாட்டாது.

5.6 இவ் வேலைத்திட்டம் தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளிற்காக **தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திரு. பிரியஞ்சித் அபேசேகர (011-2484783 / 0718610488)** என்ற அலுவலகரை தொடர்பு கொள்ளவும்.

.......................................

ஒப்பம் : கே. எம் மஹிந்த சிறிவர்தன

செயலாளர்

பிரதிகள் -

1. கௌரவ மாகாண ஆளுநர்கள் - தயவுடன் தகவலிற்காக
2. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர்கள் - தயவுடன் தகவலிற்காக
3. ஜனாதிபதியின் செயலாளர் - தயவுடன் தகவலிற்காக
4. பிரதமரின் செயலாளர் - தயவுடன் தகவலிற்காக
5. செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தயவுடன் தகவலிற்காக
6. அனைத்து மாகாண பிரதான செயலாளர்கள் - தயவுடன் தகவலிற்காக
7. கணக்காய்வாளர் நாயகம் - கணக்காய்வாளர் திணைக்களம் - தயவுடன் தகவலிற்காக

8. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு, அ. ந

9. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு, அ. ந

10. பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு, அ. ந

11. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு, அ. ந

12. அனைத்து மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர்கள் - தயவுடன் தகவலிற்கு, அ. ந

13. அனைத்து பிரதேச செயலாளர்கள் - தயவுடன் தகவலிற்கு, அ. ந

இணைப்பு 1

அபிவிருத்திப் பிரிவு

உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரத்தை அடைவதற்காக, முன்மொழியப்பட்ட பிரதான பகுதிகளின் கீழ் பின்வரும் துறைகள் தொடர்பான கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்படும்.

1. விவசாயம், கால்நடை உற்பத்தி, மீன்பிடித் துறைகளில் உற்பத்தி திறனை விருத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்துதலிற்கான கருத்திட்டங்கள்.
2. உணவு சேமிப்பு, குளிர்பதன சேமிப்பு, விவசாய உற்பத்தி போக்குவரத்து தேவைகள் உட்பட உட்கட்டமைப்புக்களை விருத்தி செய்தல்.
3. விவசாய செயலாக்கம் மற்றும் மதிப்பு கூட்டல் மையங்கள் தொடர்பான உட்கட்டமைப்புக்களை விருத்தி செய்தல்.
4. சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு மையங்கள் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகள்.
5. நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் அபிவிருத்திக்காக தொழில்நுட்ப மற்றும் திறன் விருத்தி வேலைத் திட்டங்கள்
6. உள்நாட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மூலம் உற்பத்தித் தொழில்களை மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
7. கிராமப்புற மற்றும் பிரதேச சுற்றுலாத் துறையை மேம்படுத்த அடிப்படைக் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.
8. உற்பத்திப் பொருளாதாரத்திற்குத் தேவையான பொது உட்கட்டமைப்பு அபிவிருத்தி.

Annexture 2

**Decentralized Capital Budget Programme - 2025**

| 1 | 2 | 3 |
|---|---|---|
| **S. Number** | **District** | **District Allocation Rs.Mn.** |
| 1 | **Colombo** | **207** |
| 2 | **Gampaha** | **218** |
| 3 | **Kalutara** | **126** |
| 4 | **Kandy** | **138** |
| 5 | **Matale** | **58** |
| 6 | **N' Eliya** | **92** |
| 7 | **Galle** | **103** |
| 8 | **Matara** | **80** |
| 9 | **Hambantota** | **80** |
| 10 | **Jaffna** | **56** |
| 11 | **Kilinochchi** | **13** |
| 12 | **Vavuniya** | **23** |
| 13 | **Mannar** | **23** |
| 14 | **Mullaitivu** | **23** |
| 15 | **Batticaloa** | **58** |
| 16 | **Ampara** | **80** |
| 17 | **Trincomalee** | **46** |
| 18 | **Kurunegala** | **172** |
| 19 | **Puttalum** | **92** |
| 20 | **Anuradhapura** | **103** |
| 21 | **Polonnaruwa** | **58** |
| 22 | **Badulla** | **103** |
| 23 | **Monaragala** | **69** |
| 24 | **Rathnapura** | **126** |
| 25 | **Kegalle** | **103** |
| **Total** | | **2250** |

Annexure 3

# Decentralized Capital Budget Programme - 2025

**District-**

**District Total Allocation -**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S/No. | Project Name | Total cost of the project (Rs.) | Development sector to the project belongs (as per Annexure 1) | Objective of the Project | Expected outputs through the project | Main activities of the project | Number of beneficiaries of the project | Impliment the project | | Proposed to sustain the desired output through the project | | Preparedness for project implementation * 1 / 2 / 3 | Number 13 - If the preparation number 3, what is the time and process to resolve those issues | Name, designation and phone number of an officer who can be contacted to get information about the project |
| | | | | | | | | The leading institution | Other agencies involved | Methodology | Organizational structure | | | |
| 1 | | | | | | 1 | | | | | | | | |
| | | | | | | 2 | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | 1 | | | | | | | | |
| | | | | | | 2 | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | 1 | | | | | | | | |
| | | | | | | 2 | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| Total | | | | | | | | | | | | | | |

*** - Fulfillment of basic requirements and readiness to implement the project (Including land, electricity, water, roads, raw materials, markets, human resources, technical assistance) - Number 1. High readiness 2. Medium rediness 3. Minimul rediness**

Prepared by-

Recommendation

..............................................................

District Planning Director

Approval

..............................................................

District Secretary

**இணைப்பு 04**

**பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத் திட்டம் 2025 - செயற்திட்டம்**

| துணை எண் | வேலைத் திட்டம் | இலக்கு | பொறுப்பு |
|---|---|---|---|
| 01 | மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூடி இத் தேசிய வேலைத் திட்டம் தொடர்பாக தெரியப்படுத்தல் | 2025 பெப்ரவரி 07 இற்கு முன்னர் | மாவட்டச் செயலாளர்<br>மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர்<br>பிரதி / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 02 | மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினூடாக அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கான ஒப்புதல் வழங்குதல் | 2025 பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் | மாவட்டச் செயலாளர்<br>மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர்<br>பிரதி / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 03 | கருத்திட்ட முன்மொழிவுகளிற்கான ஒப்புதல்கள் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் | 2025 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் | மாவட்டச் செயலாளர்<br>மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் |
| 04 | தவிர்க்க முடியாத காரணத்தால் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவுகளில் திருத்தம் | 2025 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் | மாவட்டச் செயலாளர்<br>மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் |
| 05 | அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்தி வேலைகளை நிறைவு செய்தல் | 2025 நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் | மாவட்டச் செயலாளர்<br>மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர்<br>பிரதேச செயலாளர்<br>பிரதி / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 06 | செயற்பாட்டிலுள்ள கருத்திட்டங்களின் மாதாந்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை அறிக்கையிடல் | வாராந்த முன்னேற்ற அறிக்கை | மாவட்டச் செயலாளர்<br>மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர்<br>பிரதேச செயலாளர் |
| | | கருத்திட்ட முகாமைத்துவ, மற்றும் மேற்பார்வை திணைக்களத்திற்கு மாதாந்த முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பித்தல் | மாவட்டச் செயலாளர்<br>மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் |
| 07 | மொத்த வேலைத்திட்டத்தின் மேற்பார்வை | மாதாந்தம் | ஜனாதிபதி செயலகம்<br>பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவ, மற்றும் மேற்பார்வை திணைக்களம் |